# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

DINAKARAN DATED 26.04.2025

மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனத்துடன்

# புதுச்சேரி பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்



▶ புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூரில் உள்ள மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனம் இடையே துணைவேந்தர் பிரகாஷ் பாபு முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

புதுச்சேரி, ஏப். 26: புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூரில் உள்ள மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் மின்சக்தி கருவிகள், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தொழில்நுட்பங்கள் மற்றும் பசுமை ஆற்றல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் புதுமைகளை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சிக்கு புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பிரகாஷ் பாபு தலைமை தாங்கி பேசும்போது, மத்திய மின்சக்தி ஆராய்ச்சி நிறுவனம் உடனான இந்த ஒப்பந்தம், இந்தியாவில் வளர்ந்து வரும் ஆற்றல் தேவைகளுக்கு ஏற்ப சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை பராமரிக்கும் மாற்று தீர்வுகளில் பணியாற்ற மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு வாய்ப்பை வழங்கும், என்றார்.

மத்திய மின்சக்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைமை இயக்குநர் பி.ஏ.சவாலே கலந்து கொண்டு பேசும்போது, புதுவை பல்கலைக்கழகத்துடனான இந்த ஒப்பந்தம், நவீன சோதனை வசதிகள் மற்றும் துறை அனுபவத்தை பல்கலைக்கழகத்தின் கல்வி அடித்தளம் மற்றும் ஆராய்ச்சி திறன்களுடன் இணைக்க உதவும் என்றார்.

முன்னதாக பல்கலைக்கழகத்தின் சர்வதேச உறவுகள் டீன் விக்டர் ஆனந்த்குமார் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரிகள், பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைத்த பசுமை ஆற்றல் தொழில்நுட்பத் துறை பேராசிரியர் ஏழுமலை மற்றும் பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். மதன்ஜீத் பசுமை ஆற்றல் தொழில்நுட்ப புலத்தின் டீன் ஜாபர் அலி நன்றி கூறினார்.

MALAI MALAR DATED 26.04.2025




பசுமை ஆற்றல் தொழில்நுட்பத்தை ஊக்குவிக்க

# மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனத்துடன் புதுவை பல்கலைக்கழகம் ஒப்பந்தம்

புதுச்சேரி, ஏப்.26—

புதுவை பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூரில் உள்ள மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

நிகழ்ச்சிக்கு பல்கலைக் கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு தலைமை வகித்தார். மத்திய மின்சக்தி ஆராய்ச்சி நிறுவன தலைமை இயக்குனர் சவாலே முன்னிலை வகித்தார். சர்வதேச உறவுகள் துறை டீன் விக்டர் ஆனந்தகுமார் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் ஏழுமலை மற்றும் அலுவலர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். பசுமை ஆற்றல் துறை டீன் ஜாபர் அலி நன்றி கூறினார்.

இந்த ஒப்பந்தம் மின்சக்தி கருவிகள், புதுப்பிக்கதக்க ஆற்றல் தொழில்நுட்பங்கள் மற்றும் பசுமை ஆற்றல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் புதுமைகளை ஊக்குவிக்கும்.

NAMADHU MURASU DATED 26.04.2025

# பெங்களூரு மின் ஆராய்ச்சி நிறுவனத்துடன் புதுவை பல்கலை. புரிந்துணர்வு ஒப்பந்தம்

புதுச்சேரி, ஏப்.26-

புதுவை பல்கலைக்கழகம் மற்றும் பெங்களூருவில் உள்ள மத்திய மின் ஆராய்ச்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தம் மின்சக்தி கருவிகள், புதுப்பிக்கதக்க ஆற்றல் தொழில்நுட்பங்கள் மற்றும் பசுமை ஆற்றல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் புதுமைகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ்பாபு தலைமை வகித்தார். மத்திய மின்சக்தி ஆராய்ச்சி நிறுவன தலைமை இயக்குனர் சுவாலே முன்னிலை வகித்தார். சர்வதேச உறவுகள் துறை டீன் விக்டர் ஆனந்தகுமார் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் பேராசிரியர் ஏழுமலை மற்றும் அலுவலர்கள், மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர். பசுமை ஆற்றல் துறை டீன் ஜாபர் அலி நன்றி கூறினார்.